தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

நான்காம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2017**

**P104** காப்பியங்களும் சங்க இலக்கியமும்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. பெரிய புராணத்தின் பாட்டுடைத்தலைவன் யார்?
2. சூளாமணி ஆசிரியர் யார்?
3. இன்னாது இகுத்த கண்ணீர் நிறுத்த செல்லால் யார்?
4. தாய்ப் போர் காலத்தில் எப்படி மகிழ்ந்தாள்?
5. குகன் இராமனிடம் படைத்த பொருள்கள் யாவை?
6. விதுரன் எத்தகைய பண்பினன்?
7. கைக்கிளை என்பதன் பொருள் யாது?
8. பாலை யாழின் தோற்றத்தை முடத்தாமக்கண்ணியார் எங்ஙனம் உவமிக்கிறார்?
9. வட மொழியில் இராமாயணத்தை இயற்றியவர் யார்?
10. பாரதம் என்ற சொல்லின் பொருள் யாது?
11. பாலைத்திணைக்குரிய பறவைகள் எவை?
12. பதிற்றுப் பத்தைத் தொகுத்தவர் யார்?
13. விமலை பயின்ற விளையாட்டு எது?
14. பாரதிதாசன் படைத்த மூன்று கவிதைக் காவியங்கள் யாவை?
15. சிற்றில் என்றால் என்ன?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. கோப்பெருந்தேவியின் கனவு யாது?
2. மாங்கனியில் காணப்படும் காப்பியத்தின் தாக்கத்தைப் புலப்படுத்துக.
3. யாயும் ஞாயும் எனத் தொடங்கும் பாடலை உவமை நயத்துடன் வெளிப்படுத்துக.
4. புறத்திணைகள் ஏழினை எழுதுக.
5. திண்ணனாரின் தோற்றம் பற்றி எழுதுக.
6. தருமன் மனத்தை சகுனி எவ்வாறு மாற்றினான்?
7. பாலைத்திணையில் இடம்பெறும் இலக்கிய நயத்தினை வெளிப்படுத்துக.
8. ஆறாம் பத்து பாடல்களில் ஒன்றினை எழுதி நயத்தினை வெளிப்படுத்துக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சூளாமணி காப்பியத்தின் சிறப்பினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பதிற்றுப் பத்தில் இடம்பெறும் புலவர்கள் பற்றிய செய்திகளை வழங்குக.

2. (அ) தமிழச்சி, கொடி முல்லை ஆகியவற்றில் இடம் பெறும் கதை மாந்தர் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) நெய்தல் திணையின் இயல்புகளை விவரிக்க.

3. (அ) குறிஞ்சித் திணையில் இடம் பெறும் முப்பொருள்கள் வெளிப்பாடு பற்றி விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) களவியல் , கற்பியல் பற்றிய கருத்துக்களைத் தொகுத்து வழங்குக.

*** 